முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1613

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.02.2024,** புதன்கிழமை

1. அன்னதான பலம் கொண்ட அரங்கனே
ஆறுமுகன் என் தயவான குருராஜனே
மண்ணுலகில் என் அவதாரம் எடுத்து மக்களை எல்லாம் ஞானிகளாக்க
தீட்சைபலம் தருகின்ற ஞான தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மாசி மாதம் 16 ம் நாள், 28.02.2024, புதன்கிழமை)
ஆசிதந்து அரங்கன் கரம்பட அடியவர்கட்கெல்லாம்
வேலவன் யான் சக்தியாக நிரம்பி அருளுகின்றேன்
3. அருளவே அரங்கன் தொடர்பு கூட்டி
அகிலத்தில் தர்மம் செய்யும் மக்களுக்கு
வரமாக என் பலமும் துணையும் உண்டு உண்டு
வடிவேலன் என் ஆசியோடு அரங்கன் வழி வருபவரெல்லாம்
4. வையகத்தில் மேல்நிலை பெற்று
தனதேட்டு வளமுடன்
தனக்கான சகல காரியங்களிலும் வெற்றி கொள்வதோடு
தன்னார்வ தொண்டு பெருக்கி
5. உலகமெல்லாம் ஆற்றல் பட
அரங்கன் அவதார நோக்கத்தை கொண்டு சென்று
அனைவருமே பொதுநல விஷயங்களில்
காரிய வெற்றியும் சர்வ சித்தியும் அடைய ஆசி உண்டு
6. ஆசி தந்து அருள் தீட்சை வழங்கி
அருளமுது அன்பர்களை நோக்கி
பசிபிணி விரட்டும் மகா சக்தியாக
தர்மத்தை வளர்த்து வர

7. வருகின்ற அரங்கன் தர்மமே
வையகத்தில் சிறந்ததாகும்
தருகின்ற அரங்கன் தீட்சையே
தவபலம் மிக்க தீட்சையாகும்

8. முருகா என வணங்கி வேண்டி
முழுமைபட மக்கள் ஞானம் ஏற்று வந்தால்
வருங்காலம் ஞான ஆட்சிக்காலமாகும்
வடிவேலன் என் தலைமை கொண்ட சூழலாக மாறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—